செ.வெ.எண்: 48 நாள்: 23-11-2017

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், நீலகிரி மாவட்டம். உதகமண்டலம்.

**மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவு விளையாட்டுப் போட்டிகள் 2017-18**

**செய்திக் குறிப்பு**

2017-2018ம் ஆண்டிற்கான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் கால்பந்து, வளைகோல்பந்து, கூடைப்பந்து, கையுந்துப்பந்து, கபாடி, இறகுப்பந்து, மேசைப்பந்து, டென்னிஸ் மற்றும் தடகளம் ஆகிய விளையாட்டுக்களில் 21 வயதிற்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

மாநில அளவிலான போட்டிகள் நடைபெறுவதற்கு முன்னதாக மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 27.11.2017 முதல் 07.12.2017 முடிய கீழ்க்குறிப்பிட்டுள்ள விவரங்கள்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மற்றும் மாவட்ட விளையாட்டுச் சங்கங்களும் இணைந்து ஒவ்வொரு 'விளையாட்டிலும் **(ஆண்கள் மற்றும் பெண்கள்)** போட்டிகள் நடத்தவுள்ளது.

| | | |
|---|---|---|
| கால்பந்து. | -06.12.2017 மற்றும் 07.12.2017 - | காந்தி மைதானம், கோத்தகிரி |
| வளைகோல்பந்து | -28.11.2017 மற்றும் 29.11.2017 - | அரசு மேல்நிலைப்பள்ளி. எடப்பள்ளி |
| கூடைப்பந்து | -27.11.2017 மற்றும் 28.11.2017- | எச்.ஏ.டி.பி. திறந்தவெளி விளையாட்டு அரங்கம். உதகமண்டலம். |
| கையுந்துப்பந்து- | -01.12.2017 மற்றும் 02.12.2017 - | எச்.ஏ.டி.பி. திறந்தவெளி விளையாட்டு அரங்கம். உதகமண்டலம். |
| கபாடி | -03.12.2017- | அரசு கலைக்கல்லூரி மைதானம், உதகை |
| இறகுப்பந்து | -28.11.2017 மற்றும் 29.11.2017- | அண்ணா உள் விளையாட்டு அரங்கம். உதகை |
| மேசைப்பந்து | -27.11.2017- | அண்ணா உள் விளையாட்டு அரங்கம். உதகை |
| டென்னிஸ் | -30.11.2017- | எச்.ஏ.டி.பி. திறந்தவெளி விளையாட்டு அரங்கம். உதகை |
| தடகளம் | -29.11.2017- | அரசு கலைக்கல்லூரி மைதானம், உதகை / எப்ரான் பள்ளி மைதானம், உதகை |

தடகளம் - **ஆண்களுக்கு**

100மீ, 800மீ, 5000மீ, 110மீ தடை தாண்டும் ஓட்டம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், மும்முறை தாண்டுதல், குண்டு எறிதல், வட்டு எறிதல் மற்றும் ஈட்டி எறிதல்.

தடகளம் - **பெண்களுக்கு**

100மீ, 400மீ, 3000மீ, 100மீ தடை தாண்டும் ஓட்டம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், மும்முறை தாண்டுதல், குண்டு எறிதல், வட்டு எறிதல் மற்றும் ஈட்டி எறிதல்.

மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பவர்கள் 31.12.2017 அன்று 21 வயதிற்குட்பட்டவர்களாக (01.01.1997 அன்றோ அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்களாக) இருத்தல் வேண்டும். 21 வயது பூர்த்தியானவர்கள் இப்போட்டிகளில் பங்கேற்க கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மாவட்ட அளவு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று முதல் மூன்று இடங்களில் வெற்றிப்பெறும் விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு முறையே ரொக்க பரிசாக தலா தொகை ரூ.1000/-, ரூ.750/-, மற்றும் ரூ.500/-ம் தகுதிதச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

குழு விளையாட்டுப் போட்டிகளில் ஒரு விளையாட்டு வீரர் / வீராங்கனை ஒரு போட்டியில் (one event only) மட்டுமே பங்கு கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெறும் ஆண்கள் மற்றும் பெண்கள் மாநில அளவு போட்டிகளில் நீலகிரி மாவட்டம் சார்பாக பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டு மண்டல அளவிலான போட்டிகளில் நீலகிரி மாவட்டம் சார்பாக பங்கேற்க அனுப்பிவைக்கப்படுவார்கள். மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்ட அணி விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு விளையாட்டுச் சீருடை வழங்கப்படும்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர் வீராங்கனைகள் தமிழ்நாட்டில் குறைந்தது 5 வருடங்களாவது வசித்து வருவதற்கான சான்றினை – குடும்ப அட்டை (அ) வாக்காளர் அட்டை (அ) ஓட்டுநர் உரிமம் (அ) பள்ளி மாற்றுச் சான்றிதழ் (அ) பள்ளி மதிப்பெண் சான்றிதழ் **(Ration Card Xerox / Voter ID Xerox / Driving License Xerox / School Mark Sheet Xerox / Transfer Certificate Xerox)** ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றின் ஒளி நகல் போட்டிகள் நடைபெறும் நாளன்றே சமர்ப்பிக்க வேண்டும்.

**நீலகிரி மாவட்ட** அணிக்காக விளையாட தேர்வு செய்யப்படும் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் தமிழகத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் வசிப்பவர்களுக்கான பிறப்பிடச் சான்றிதழ் அல்லது இருப்பிடச் சான்றிதழ் **Nativity Certificate or Residential Certificate** மாநில அளவிலான போட்டிகளுக்கு செல்வதற்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும்.

போட்டிகளில் பங்கேற்பதற்கான நுழைவு விண்ணப்பங்களை மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர் அவர்களிடம் அல்லது அந்தந்த விளையாட்டுச் சங்க பொறுப்பாளர்களிடம் போட்டிகள் நடைபெறும் நாளன்று சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே, மேற்படி நடைபெறவிருக்கும் மாவட்ட அளவிலான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க பள்ளி / கல்லூரி / விளையாட்டுக் குழுக்களிலிருந்து அதிக அளவில் விளையாட்டு வீரர் வீராங்கனைகளை அனுப்பிவைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளின் நிகழ்வுகள் குறித்து மேல் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர், நீலகிரி அவர்களை 2444084 / 7401703491 தொடர்புகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஒம்..- .. .. ..
மாவட்ட ஆட்சியர்.
நீலகிரி.

/ உண்மை நகல் /

23/11/17

மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன்
அலுவலர், நிலகிரி மாவட்டம்.